2016 ஆகஸ்ட் 1] [திரு. சேவூர் எஸ். ராமசந்திரன்]

சமர்ப்பித்துள்ளார். இவரது அறிக்கையில், கல் உத்திரத்தில் ஏற்பட்டுள்ள இந்த சிறு விரிசல் புதிய விரிசல் இல்லையென்றும், சில ஆண்டுகளுக்கு முன்பே ஏற்பட்டுள்ளது என்றும், இதனால், இராஜகோபுரத்திற்கு எந்த பாதிப்பும் தற்போது இல்லையென்றும் தெரிவித்துள்ளார். மேலும், கல் உத்திரத்தின்கீழ் இரும்புக் குழாய் மற்றும் angle–மூலம் முட்டுக் கொடுத்து, தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து, திருப்பணிப் பணிகளைத் தொடரலாம் எனத் தெரிவித்துள்ளார். மேலும், விரிசல் பாதிப்பை stainless steel கம்பி கொண்டு பாதிப்பு பகுதிகளைத் தைத்து, அதாவது, stone stitching with steel anchors மூலம் சரிசெய்யலாம் எனவும் தெரிவித்துள்ளார். இத்தகைய பணிகளை மேற்கொள்ளும் அனுபவம்பெற்ற நிறுவனங்கள் மும்பை மற்றும் புதுடில்லி ஆகிய நகரங்களில் மட்டுமே செயல்பட்டு வருவதாகத் தெரிவித்தார். இந்தச் சீரமைப்புப் பணிக்கான மதிப்பீடு குறித்து மேற்கண்ட நிறுவனங்களிடமிருந்து விவரங்களைப்பெற்று, உடனடியாக சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. அறிவிப்பு

மானியக் கோரிக்கைகள், 2016–2017, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2016–2017 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of clause 3 of Article 203 of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the Demands for Grants for the financial year 2016–2017."